Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 31 | விளம்பி கார்த்திகை 1958 நவம்பர் | இதழ் 11

மயிலத்தில் அடுத்த சமாஜ மாநாடு
விண்ணப்பம்

நல். முருகேச முதலியார், B. A., சமாஜத் தலைவர்

நமது சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 53-ஆம் ஆண்டு நிறைவு விழாவும் சைவர் மாநாடும், மயிலத்தில் வரும் டிசம்பர் மாதம் 27, 28, 29-ம் தேதிகளில் சிறப்புற நடைபெற உள்ளன. அவற்றை நலமுற நடத்தித் தருதற்குப் பொம்மபுரஆதீனம் மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய தேசிக சுவாமிகள் பேரருட் பெருந்தண்ணளியுடன் திருவுளம் இசைந்தருளி யிருக்கின்றார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முன்பும் ஒருமுறை 1940-ல் நமது சமாஜ மாநாட்டினைச் சிறப்புடன் நடத்திக் கொடுத்தருளி யிருக்கின்றமையினை, ஈண்டு நாம் நன்றியுடன் நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

நடைபெற உள்ள சமாஜத்தின் 53-ஆம் ஆண்டு நிறைவு விழாவின்கண் சைவ சித்தாந்த சாத்திரங்களில் பேரறிஞரான சித்தாந்த சிகாமணி - திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T. அவர்கள் சைவர் மாநாட்டிற்கும், திருமதி. வித்துவான் ந. மங்கையர்க்கரசி அம்மையார் அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டிற்கும், திரு. வித்துவான் அடிகளாசிரியர் அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டிற்கும் தலைமை தாங்கிச் சிறப்பிக்க இருக்கின்றனர்.

சிறந்த பேரறிஞர்கள் பலரின் சொற்பொழிவுகளும், இனிய தேவார இசையரங்கும் நிகழ இருப்பதோடன்றி, ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள் (சிவக்கவி மணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.) அவர்கள்

போன்ற சைவச் சான்றோர்கள் பலரும் விழாவிற் கலந்து கொள்ள இணங்கியுள்ளனர்.

சைவ இளைஞர் மாநாட்டிற் சைவநலம் சான்ற தமிழ்க் கல்லூரி மாணவர்கள் பலர் பங்குகொள்வர் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இவ்வாண்டு புதிய ஏற்பாடாகச் சைவ சித்தாந்த நுண் பொருள்கள் பற்றிய ஆய்வுக் கூட்டம் (ஆங்கிலத்தில் செமினர் என்று சொல்லுவார்கள்) ஒன்றும் தனியாக நடத்த முடிவு செய்யப்பெற்றுளது. அதன்கண் அறிஞர் பெருமக்கள் ஆராய்ச்சி உரைகள் வழங்குவார்கள். "அத்து விதம்" என்ற பொருளைப்பற்றி இந்த வித்வத்சபை விவா திக்க உத்தேசித்திருக்கிறது.

இதுவரை நம் மாநாட்டுக் கூட்டங்கள் பெரும்பாலும் சொற்பொழிவு நிகழ்ச்சிகளாகவே இருந்துள்ளன. சமாஜ மும் சைவர்களும் செய்யவேண்டிய ஆக்கவேலைகள் பல இருப்பதால், தீர்மானங்களை நிறைவேற்றவும், செயல் முறைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுத்துக்கொள் ளவும் ஒரு செயற் கூட்டமும் இவ்வாண்டு நடைபெறும்.

மாநாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளின் நினைவு மலர் என்னும் சிறந்த கட்டுரைத் தொகுப்பு நூல் ஒன்றும் சமாஜச் சார்பில் வெளியிடப்பெறும்.

மாநாட்டைப் பற்றிய முழு விவரங்கள் அடுத்த சித்தாந்த இதழில் வெளியிடப்படும்.

சமாஜ உறுப்பினர்களும் அன்பர்களும் ஆதரவாளர் களும் சமாஜத்தின் மாவட்டப் பிரதிநிதிகளும் ஆகிய அனை வரும் விழாவிற்கு மறவாது தவறாது திரளாக வந்திருந்து சிறப்பித்துச் சமாஜம் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றி வரும் அரும்பெரும் பணிகள் மேலும் மேலும் ஆக்கம் பெற்று வளர்ந்தோங்க, ஆவன பலவும் செய்துதவும்படி வேண்டிக்கொள்கின்றேன். புது அங்கத்தினர்கள் முன்கூட் டியே பெருவாரியாகச் சேரவேண்டுமெனக் கோரப்படு கிறது. சைவசபைகளும் பிரதிநிதிகளை அனுப்பி ஒத்துழைக்கு மாறு விரும்புகிறேன். தகவல்களை சமாஜச் செயலாளருக்கு முன்னதாகவே எழுதவும். ஆய்வுக் கூட்டத்தில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்க விரும்புபவர்களும் முன்னதாகவே எழுதித் தெரிவிக்கவும்.

விழா இனிது நிகழ இறையருள் துணைபுரிவதாக! அன்பர்கள் உழைப்பும் பெரிதும் தேவை.

ஞானியார் நினைவுமலர் : கட்டுரை - 17

*பதி பசு பாச விளக்கம்

முன்னுரை : பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களும் மக்கள் அனைவராலும் ஆராய்ந்துணர்தற்குரியன. உலகிலுள்ள நூல்களெல்லாம் இம் மூன்றனையோ, அல்லது இம் மூன்றனுள் ஒன்றனையோ, அல்லது அவற்றின் ஒவ்வொரு பகுதியினையோ ஆராய எழுந்தனவேயாம். இம் முப்பொருள்களின்கண் அடங்காததாய பொருள் எதுவும் இல்லை. ஆகலின் எல்லா நூற்பொருள்களும் இம் முப்பொருள்களையே நுதலி எழுந்தன எனப்படும்.

"சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள ; மறையெலாம் மொழிய நின்றன ;
ஆன்றதோர் தொல்பதி, ஆருயிர்த்தொகை,
வான்திகழ் தளை,என வகுப்பர் அன்னவே."

எனவரும் செய்யுளும், "பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல்" என வரும் சிவப்பிரகாசத் திருமொழியும் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

பதி பசு பாசம் என்பன தமிழில் முறையே கடவுள் உயிர் உலகம் எனவும், இறை உயிர் தளை எனவும் வழங்கப்படும். வடமொழியில் பாசம் என்னும் சொல் (பச்-to bind) 'கட்டுவது' என்னும் பொருள் குறித்து உயிர்களைப் பிணித்து நிற்கும் மும்மலங்களையும், பசு என்னும் சொல் 'கட்டுப்பட்டது' என்னும் பொருள்தந்து மும்மலப் பிணிப்புண்ட உயிர்த்தொகைகளையும், பதி என்னும் சொல் (பா - to protect) காப்பாற்றுபவர் எனப் பொருள் பயந்து

---

*இது நம் சமாஜத் தலைவர் இராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார், B.A. அவர்கள், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் 1932ல் திரு T. P. இராமசாமிப் பிள்ளை அவர்கள் மாளிகையில் ஆற்றிய சொற்பொழிவினைக் குறிப்புகள் எடுத்து உதவியது. கட்டுரை யாக்கியவர் : புலவர் முருகவேள், எம்.ஓ.எல்.

இறைவனையும் உணர்த்தும். எனவே, பதி பசு பாசம் என்னும் சொற்கள் ஆழ்ந்த பொருள் பொதிந்த உருவகக் குறிப்புடைய சொற்களாக விளங்குகின்றமை உணரலாம்.

இனி, எல்லா உயிர்ப்பொருள் உயிரல்பொருள்களிலும் கலந்து பதிந்திருப்பவன் பதி; மனிதனால் நடத்தப்பெறும் பசுக்களாகிய விலங்குகள்போலச் சிற்றறிவுடையனவாய், ஒரு முழுமுதற் றலைவனால் இயக்கப்பெறும் உயிர்த்தொகைகள் பசுக்கள்; தொடுவுழித் தொடுவுழி நீங்கி விடுவுழி விடுவுழிப் பரத்தலான் நீரினை மறைக்கும் பாசிபோல, உயிரின் அறிவினை மறைப்பன பாசங்கள் எனக் கொள்ளுதலும் உண்டு. முற்றறிவும் சிற்றறிவும் அறிவின்மையும் ஆகிய பொருட்டன்மையின முறையே உடைமை பற்றிப் பதி பசு பாசம் என இவை நிரலே வைத்து ஓதப்படும்.

பதி: பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களுள் பாசம் ஆகிய உலகமும்,பசு ஆகிய உயிரும் உண்டு என மக்களிற் பெரும்பாலோர் உடன்படுவராதலின், உண்டு எனப் பெரிதும்நிறுவப்படவேண்டுவதுபதிப்பொருளேயாம். பதிப் பொருள் காட்சி யளவையால் (பிரத்தியட்சப் பிரமாணத்தால்) அறியப்படுவ தன்று. அது கருதலளவை (அனுமானப் பிரமாணம்) கொண்டே உணரப்படும். கண்டதைக் கண்டபடியே அறிபவர் சிறியர். "பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்" என மணிவாசகர் கூறுவர். ஆதலின், கண்டதனைக் கொண்டு காணாததனை அறிபவரே பெரியர். ஆசிரியர் கரும்பலகையில் எழுதிய எழுத்தினைத் தான் கண்டுணர்ந்தவாறே 'கோடு' என்பவன் அறிவிற் சிறியவன்; அதனை அகரம் முதலியனவாக உணர்ந்து கூறுபவன் அறிவிற் பெரியவன். ஏனெனில், அவன் கண்டதைக் கண்டவாறு கொள்ளாமல் கண்ட வரிவடிவைக் கொண்டு, காணாத ஒலி வடிவைக் கண்டுணர்ந்து கூறினான் ஆதலால். இங்ஙனமே, கண்ட உலகத்தைக் கொண்டு காணாத கடவுளையுணர்ந்து கொள்ளுபவர்களே பெரியோர்களாவர். "ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும் காலமே உனை ஓத நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என வரும் திருவாசகம், காணப்படும் உலகத்தைச் சான்றாகக் கொண்டே காணப்படாத கடவுளைக் கருதி யுணர்தல் வேண்டும் எனக் குறிப்பிடுதல் அறிந்தின்புறற்பாலது.

நாம் குடத்தைக் கண்டால் அதனைச் செய்த குயவன் ஒருவன் உண்டு என உணர்கின்றோம்; அதுபோலவே, உலகத்தைக் காணும் நாம் இதனைப் படைத்த கடவுள் ஒருவன் உண்டு என உணரற்பாலது. குடம் போன்றது உலகம்; குடம் வனைதற்குரிய மண்போன்றது மாயை; குடம் வனைதற்குத் துணைசெய்யும் தண்ட சக்கரங்கள் போல்வன அருளாற்றல்கள்; குடம் வனைந்த குயவன் போல்பவன் இறைவன்.

“ காரிய கார ணங்கள் முதல்துணை நிமித்தம் கண்டாம்;
பாரில்மண் திரிகை பண்ணு மவன்முதல் துணைநி மித்தம்;
தேரில்மண் மாயை யாகத் திரிகைதன் சத்தி யாக,
ஆரியன் குலால னய்நின் றாக்குவன் அகிலம் எல்லாம் ”

எழுத்துக்களுக்கு அகரம் முதலாய் நிற்றல்போல, உலகிற்கும் முதலாய் நிற்கும் தலைவன் ஒருவன் வேண்டப்படுவான். அவயவப் பகுப்புடையனவும், சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவனவும், சுட்டியறியப்படுவனவும் ஆகிய பொருள்கள் யாவும் தோன்றி நின்றழியும். அவன் அவள் என்னும் உயர்திணையும், அது என்னும் அஃறிணையு மாகிய அவயவப் பகுப்புடைமையானும்; அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப் படுதலானும்; அவன் அவள் அது எனச் சுட்டி யறியப் படுதலானும்; காணப்படும் இவ்வுலகம் தோன்றி நின்றழியும் முத்தொழில் உடையதாகும். செய்வோனை இன்றிச் செய்வினை யின்மையால், உலகம் முத்தொழிற் படுதற்குரிய வினைமுதலாக இறைவன் உண்டு என்பது தெளியப்படும். ஜகத்—அழிவது, பிரபஞ்சம்—மிகப் பரவி யிருப்பது, லோகம்—பார்க்கப்படுவது என்னும் சொற் பொருள் நுட்பங்களாலும், உலகம் முத்தொழில் உடையதென உணரலாம். ஒரு சிலர் உலகம் தானே நின்றழியும் என்பர். அதனை மறுத்தற்கே “ தோன்றிய ” எனக் கூறாது, ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டது எனும் பொருள்படத் “ தோற்றிய ” எனப் பிறவினை வாய்பாட்டால் ஆசிரியர் மெய்கண்டார் ஓதியருளினார். இவ்வாற்றால் பதிப் பொருளுண்மை தெளியப்படும்.

" சிவன்அரு உருவும் அல்லன் சித்தினோ டசித்தும் அல்லன்
பவமுதற் றொழில்கள் ஒன்றும் பண்ணிடு வானும் அல்லன்
தவமுதல் யோக போகம் தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பி னானே"

" உலகெலா மாகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்தல் இன்றித் தானே
நிலவுசீர் அமலன் ஆகி நின்றனன் நீங்கா தெங்கும்."

பசு: இனி, பசுவாகிய உயிர்ப்பொருள்பற்றிப் பல வேறு மதத்தினரும் பலவேறு வகையாகக் கூறுவர். அவர்களுள் உயிர் என்பதொரு பொருள் இல்லை என்பர் சூனியான்மவாதிகள். உடம்பையே உயிர் என்பர் தேகான்மவாதிகள். ஐம்பொறிகளே உயிர் என்போர் இந்திரியான்மவாதிகள். அந்தக்கரணங்களையே உயிர் என்பவர்கள் அந்தக்கரணான்மவாதிகள். நுண்ணுடலையே உயிர் என்று கூறுவோர் சூக்கும தேகான்மவாதிகள். பிராணவாயுவே உயிர் என்று உரைப்பவர்கள் பிராணான்மவாதிகள். பிரமப் பொருளே உயிராகும் எனும் கொள்கையுடையவர்கள் பிரமான்மவாதிகள். மேற்கூறிய உடல் பொறி முதலிய அனைத்தும் கூடிய சமுதாயமே உயிர் என்போர் சமுதாயான்மவாதிகள். இங்ஙனம் உயிர்ப்பொருள் பற்றி இன்னும் வெவ்வேறு கொள்கைகளைக் கூறுவோர் மற்றும் பலருளர்.

'இல்லை' என்று சொல்லிக்கொண்டு நிற்கும் அறிவு ஒன்று உண்டு ஆதலால், சூனியான்மவாதிகள் உயிர் என்பதொரு பொருளில்லை என்றல் பொருந்தாது. யான் உடம்பு, யான்கால், யான்கை என வழங்குவாரின்றி, எனதுடம்பு எனதுகால் எனதுகை என வேற்றுமைப் படவே யாவரும் வழங்கக் காண்டுமாகலின், உடம்பின் வேறாக உயிர் உள்ளது. ஐம்புலனாய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களை அறியுங்கால் ஐம்பொறிகளுள் ஒன்றறிந்ததனைப் பிறிதொன்று அறிய மாட்டாமையின், ஐம்பொறிகளானும் ஐம்பயனும் அறிவதாகிய உயிர் வேறொன்றுண்டு. ஐம்பொறிகள் அறிந்த நுகர்பொருளைச் சித்தம்

சிந்தித்தும், மனம் சங்கற்ப விகற்பம் செய்தும், அகங்காரம் ஒருப்பட்டெழுந்தும், புத்தி நிச்சயம் செய்தும் அறியுமாயினும்—யான் சிந்தித்தேன், யான் சங்கற்ப விகற்பம் செய்தேன், யான் ஒருப்பட்டெழுந்தேன், யான் நிச்சயம் செய்தேன் என எண்ணி அறிய வல்லனவல்லவாகலின், அந்தக்கரணங்களே உயிர் என்றல் அமையாது. துயின்றுழியும் விழித்துழியும் பிராணவாயு ஒரு பெற்றித்தாகவே இயங்கா நிற்பவும், உறக்கத்தின்கண் இன்பத்துன்ப நுகர்ச்சியும் உடலியக்கமும் நிகழாமையின், பிராணவாயுவின் வேறாக உயிர் என்பதுளது. எக்காலத்தும் திரிபின்றி அறிந்து நிற்றல் சித்தாகிய பிரமத்தின் இயல்பாகலான், உணர்த்திய வழியே உணரும் இயல்பிற்றாகிய உயிரைப் பிரமம் என்றல் கூடாது. உடல் பொறி முதலியன அனைத்துங்கூடிய சமுதாயமே உயிர் எனின், உடல் பொறி முதலியன் எல்லாம் மாயையின் காரியங்களேயாய் நிலைபேறுடையன அன்மையின், நிலைபேறுடைய உயிர் எனப்படா. எனவே, மாயா காரியங்களான் யாக்கப்பட்டியன்ற உடம்பின்கண் அவற்றிற்கு வேறாக உயிர் என்பது உள்ளது எனத் தெளியப்படும்.

“ அசித்தரு வியாப கம்போல் வியாபகம் அருவ மின்றாய்
வசித்திட வரும்வி யாபி எனும்வழக் குடைய தாகி
நசித்திடா ஞானச் செய்தி அணுதியே மறைத்து நிற்கும்
பசுத்துவம் உடைய தாகிப் பசுவென நிற்கும் ஆன்மா ”

பசுக்கள் வெண்மையும் சிவப்பும் கறுப்புமாக இருத்தல் காண்கின்றோம். அதுபோல, ஆணவமலம் ஒன்றேயுடைய விஞ்ஞானகலரும், ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடைய பிரளயாகலரும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலமுடைய சகலரும் என உயிர்கள் முத்திறப்படும். இவ்வுயிர்கள் கேவலம் (புலம்பு) சகலம் (புணர்வு) சுத்தம் (புரிவு) என்னும் மூவகைக் காரணவத்தைகளையும், சாக்கிரம் (நனவு) சொப்பனம் (கனவு) சுழுத்தி (உறக்கம்) துரியம் (பேருறக்கம்) துரியாதீதம் (உயிர்ப்படக்கம்) என்னும் காரியாவத்தைகளையும் எய்தும் என்பதும் பிறவும் விரிவாக அறிதற்குரியன.

" கேவல சகல சுத்தம் என்றுமூன் றவத்தை ஆன்மா
மேவுவன் ; கேவ லந்தன் னுண்மை ; மெய் பொறிகள் எல்லாம்
காவலன் கொடுத்த போது சகலனும் ; மலங்கள் எல்லாம்
ஓவின போது சுத்தம் உடையன்உற் பவம்து டைத்தே."

பாசம் - ஆணவம் : பாசமானது ஆணவம் கன்மம் மாயை என மூவகைப்படும். ஆணவமானது " நெல்லிற்கு உமியும் நிகழ் செம்பினிற் களிம்பும் போல் சொல்லிற் புதிதன்றுய்த் . தொன்மையே " உயிர்க்கு உளதாவ தாகலின், அது மூலமலம்அல்லது சகச மலம் என்றும் ; கன்மம் மாயை என்பன ஆணவ மலநீக்கத்தின் பொருட்டு இடையே வந்து செயற்கையாகக் கூடுவன வாகலின், அவை ஆகந்துக மலம் என்றும் கூறப்படும். ஆணவ மலமாவது கண்ணை மறைக்கும் இருள்போல உயிரின் அறிவை மறைத்து நிற்பதாகும். பூத இருளானது ஒரு பொருளும் காட்டாதாயினும் தன்னைக் காட்டி நிற்கும் ; ஆணவ இருளோ பிறபொருள்களைக் காட்டாமை மட்டுமே யன்றித் தன்னையும் கூடக் காட்டாது. " ஒரு பொருளுங் காட்டா திருள் உருவங் காட்டும், இரு பொருளும் காட்டாதிது " " பலரைப் புணர்ந்தும் இருட் பாவைக்குண் டென்றும் கணவற்கும் தோன்றுத கற்பு " எனத் திருவருட்பயன் விளக்குதல் ஈண்டு அறிந்தின்புறற்பாலது. மோகம் மதம் அராகம் கவலை தாபம் வாட்டம் விசித்திரம் என்னும் ஏழும் ஆணவமலத்தின் காரியங்களாகும் என்பர் சிவஞான முனிவரர். விகற்பம் கற்பம் குரோதம் மோகம் கொலை அஞர் மதம் நகை என்னும் எட்டும் ஆணவ மலத்தின் குணக்குறி என்று அருணந்தி சிவனர் தமது இருபாவிருபஃது என்னும் நூலிற் கூறுவர்.

" ஒன்றதாய், அனேக சத்தி யுடையதாய், உடனுய், ஆதி
அன்றதாய், ஆன்மா வின்றன் அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று,போத் திருத்து வத்தை நிகழ்த்திச்,செம் பினிற்க ளிம்பேய்ந்
என்றும்அஞ் ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே " [ரு,

கன்மம் : ஆணவமலச் சார்பால் உயிர்கள் செய்யும் வினைகளின் தொகுப்பே கன்மமலம் ஆகும். காரியங்கள் எல்லாம் ஒருங்கே தோன்றுது அடைவே தோன்றுதற்குக்

காரணம் வேண்டுதலான், கன்மமலம் ஆகிய வினையுண்மை துணியப்படும். வினையில்லையாயின், விதித்தன செய்து விலக்கியன ஒழிதலாற் பயனின்றாய் முடியும். உயிர்களின் இன்பத்துன்ப நுகர்ச்சிகளுக்குக் காரணமாய் அமைவன இருவினைகளேயாம். "வினையானது மந்திரம் முதலிய அத்துவாக்கள் இடமாக மனம் வாக்குக் காயங்களான் ஈட்டப்பட்டுத் தூலகன்மமாய் ஆகாமியம் எனப் பெயர்பெற்று, பின்னர்ப் பக்குவமாங்காறும் சூக்கும கன்மமாய்ப் புத்தி தத்துவம் பற்றுக்கோடாக மாயையிற் கிடந்து, சாதி ஆயுப் போகம் என்னும் மூன்றற்கும் ஏதுவாய் முறையே சனகம் தாரகம் போக்கியம் என்னும் மூவகைத்தாய், அபூர்வம் சஞ்சிதம் புண்ணியபாவம் என்னும் பரியாயப் பெயர் பெற்று, பின்னர்ப் பயன்படுங்கால் ஆதிதைவிகம் ஆதியான்மிகம் ஆதிபௌதிகம் என்னும் முத்திறத்தாற் பல திறப்பட்டுப் பிராரத்தம் எனப்பெறும்."

"தன்மமோ டதன்ம மாகித் தானிரு பயனுந் தந்து,
நன்மைதீ மையினும் இன்பத் துன்பினும் நாடிக் காண,
முன்னமே ஆன்மா வின்தன் மும்மலத் தொன்ற தாகிக்
கன்மமும் மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்."

மாயை : இங்ஙனம் வினையுண்மை பெறப்படவே, அஃது எய்தற்குப் பற்றுக்கோடாகிய மாயை யுண்மையும் பெறப்படும். உலகிற்கு முதற்காரணம் எதுவோ அதுவே மாயையாகும். 'மா' என்பது ஒடுங்குதல், 'யா' என்பது வருதல் ; ஆகலின் எல்லாக் காரியங்களும் தன்பால் வந்து ஒடுங்குதற்கும் தன்னினின்றும் தோன்றுதற்கும் காரணமாய் நிற்பது மாயை எனப்படும். ஒன்றற்கொன்று நுண்ணிதிற் செல்லும் சூக்குமங்கட்கு முடிவிடமாய் நின்ற சூக்குமப் பொருள் யாது, அது மாயை என்க. மாயையின் காரியம் தனு கரணம் புவனம் போகம் என்பன. மாயை சுத்தமாயை அசுத்த மாயை என்று இருவகைப்பட்டுத் தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்கட்குக் காரணமாம். ஆணவ இருளின் அழுந்திக் கேவலநிலையில் அறிவிழந்து கிடக்கும் உயிர்கட்கு உடலும் கருவியும் பிறவுமாக அமைந்து, ஒருசிறிது அறிவாகிய ஒளியைத் தோற்றி உதவி செய்வது மாயையேயாகும். அது

குறித்தே ஆசிரியர் மெய்கண்டார் "மாயாதனுவிளக்கா மற்றுள்ளம் காணுதேல் ஆயாதாம் ஒன்றை" என அருளிச் செய்வாராயினர். இங்ஙனம் உயிர்களின் விழைவு அறிவு செயல்களை விளக்கும் இயல்பிற்றாகிய மாயை, ஆணவமலத்தொடர்பால் ஒரோவழி உயிர்களின் விழைவு அறிவு செயல்களை மறைப்பதும் உண்டு. ஆயினும் அப்பெற்றி மாயைக்கு ஆணவமலச் சார்பானுய செயற்கையேயன்றி இயற்கையன்று.

"நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் அகிலத் துக்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகம் தனுகர ணமும்உ யிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யு மன்றே."

முடிவுரை: இதுகாறும் ஓரளவு இயன்றபெற்றி சுருக்கமாக வகுத்துணர்த்தப்பட்ட பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களைக் குறித்து, சைவ சித்தாந்த மூல முதலாசிரியர் எனப் பெரிதும் போற்றி வழுத்தத்தக்க ஆசிரியர் திருமூலர் அருளிச் செய்த திருமந்திரப் பாடல் ஒன்றை, ஈண்டு நினைவு கூர்ந்து முடிப்போமாக!

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே"

ஞானியார் நினைவுமலர் : கட்டுரை-18

ஸ்ரீசேக்கிழார்சுவாமிகளும் பெரியபுராணமும்*

உலகின்கண் நிறைந்துள்ள எண்பத்து நான்கு லக்ஷம் யோனி பேதம் ஜீவர்களுள் மனிதப்பிறப்பே உயர்வாகக் கருதப்படுகின்றது. ஆயினும் இயல்பாக யாவரும் இச்சிக்

***திருப்பாதிரிப்புலியூர்-ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் 9-9-'34-ல் திருவாளர்-தி. பி. இராமசாமி பிள்ளை அவர்களில்லத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.**

கும் இன்பம் அணுவளவும் காணப்படுவதில்லை. "ஓரினுள்ளமே பாரின் மானுடர் முதலுளவறு பிறப்பூடுஞ், சேருமின்ப மொன்றில்லை யென்பது பிரத்தியக்கமா நீவல்லாய்" என்பது சாந்தலிங்க சுவாமிகள் கூற்றாகும். இன்பத்தை நாடுவதே நம்மனோரியல்பு. இன்பம் கலவாததை யிகழ்கின்றோம். பிறப்பு இன்பத்தைப் பயக்காவிடின் அதனை வெறுத்தல் வேண்டும். நம்மாசிரியர்கள் தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய தோத்திரங்களிலெல்லாம் பிறவி வேண்டாம் என்று அழுதரற்றினர்.

திருந்தா வமணர் தந்நீ நெறிப்பட்டுத் திகைத்து முத்தி
தருந்தா ளிணைக்கே சரணம் புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா வரக்கனுட னெரித்தாய் பாதிரிப் புலியூர்
இருந்தா யடியே னினிப் பிறவாமல் வந்தேன்று கொள்ளே.

எனவரும், திருநாவுக்கரசுகளது திருப்பாதிரிப்புலியூர்த் திருவிருத்தமும்,

" இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
யறவாநீயாடும் போதுன்னடியின் கீழிருக்க வென்றார் "

எனவரும் காரைக்காலம்மையாரின் விண்ணப்பமும் குறிக்கத்தக்கன. இவர்கள் விரும்புவது பிறவாமையே. 'பிறப்பு துன்பமுடைமையான் அடியவர்களஞ்சினார்கள். உலக வாழ்க்கை துன்பத்திலுழலச் செய்வித்தது. யாது செய்வது என்று அறியாது திகைத்தனர். துக்கத்தினின்றும் விடுதலையடைய வேண்டுமென்றே நாடினார்கள். "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது, வேண்டாமை வேண்ட வரும்" என்பது திருக்குறள். உலகம் துன்பமாதலறிந்தவன் ஒரு பொருளை வேண்டுவானாயின் அப்பொருள் பிறவாமையே. ஆகவே பிறப்பை யறுத்தல் அன்பர்களுக்கு லட்சியமாயிற்று.

இனி இக் கொடிய பிறப்பை யொழித்தற்குச் சாதகமான வழியாதென ஆராய்வாம். ஒரு கெடுதி சம்பவிக்கப்

போகிறதென்று அறிந்த காலத்து அதனுக்குக் காரணமாயுள்ளவற்றைச் சரிப்படுத்தி அக்கெடுதியைத் தவிர்ப்பது போல் பிறவிக்குக் காரணமாயுள்ளவற்றை நீக்கிக்கொள்ள முயலவேண்டும். பிறவிக்கு மூலமாயிருப்பது பேதைமையே. அம்மயக்கம் இறைவன் என்றுண்டோ அன்றுமுதல் உயிர்களைப் பற்றிக் கொண்டேயிருக்கின்றது. மயக்க உணர்ச்சியே பிறப்பாகும். "மருளானும் மாணாப்பிறப்பு" என்பது திருவள்ளுவர் ஆப்தமொழி. இன்பமில்லாத பிறப்பு விபரீதவுணர்ச்சியானே பெறப்படும். மருள், மயக்கம், விபரீத உணர்ச்சி, அவிச்சை என்பன ஒரு பொருட் கிளவி. மருள் என்று மொழிந்த உடன், உடனே உணரும் பொருள் பித்து என்பதாகும். உலக நடையில் ஒரு காதலனைப் பைத்தியம் பிடித்தவன் என்று கூறுகிறோம். உண்மையை மற்றொன்றாகக் கருதுபவன் பித்துப்பிடித்தவனாவன். பொருளல்லவற்றைப் பொருள் என்றறிதல் மருள். மறுபிறப்பில்லை, தெய்வமில்லை நல்வினை தீவினையில்லை இவை ஒவ்வொன்றும் அம்மருளின் அம்சங்களே. உண்மை நூலல்லாதவற்றை உண்மை யென்று கோடலும் மருளே. அதுவே அவிச்சை. இது துன்பத்திற்குக் காரணமாயுள்ளமையான் இதனைப் போக்கி இன்பம் நாடவேண்டும். அவிச்சையைப் போக்குவதுதான் பிறவிக் கடலைக் கடத்தல் என்று கூறுவர் ஆன்றோர். பிறவிக்கடல் அவிச்சை சொரூபமாயுள்ளது. இவற்றினின்றும் நீங்கி இன்பத்தைச் சார முயலுதல் அவசியமாகும். அவ்வின்பம் செம்பொருள் வடிவம் எவற்றிற்கும் மேலானதோர் சிறப்புடையது. "பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு" என்று திருவள்ளுவர் அறிவுறுத்தினர். செம்பொருளாவது உயிர்கள் தன்னறிவாலும், பற்றியுள்ள பாசவறிவாலும் அறிய முடியாததாய் நிற்கும் பதியே யாகும். அவ்விறைவன் எல்லாவற்றிலும் சிறந்ததாய் இன்ப சொரூபனாகலின் சிறப்பென்னும் செம்பொருளாயினன். காண்பது என்பது உயிர் தன் அவிச்சையினின்றும் நீங்கிச் செம்பொருளாகிய இறைவனோடு ஒற்றுமையுற இடைவிடாது தியானித்தல். ஆண்டவன் அருள்மயமாய் நின்று பேதைமை நீங்க உண்மை யறிவு பெறுவதே பிறவியினின்று விடுதலை என்ற முத்தியாகும்.

பிறவியென்னும் கூட்டில் உயிர் எனும் பறவை அடைக்கப்பட்டிருக்கிறது. இக் கூட்டிலிருந்து வெளிக் கிளம்பப் பறவைக்கு இருபெருஞ் சிறகுகள் இன்றியமையாதன. அதுபோல் உயிரும் விடுதலையடைய இருபெருஞ் சிறகுகளை உடைத்தாயிருத்தல் வேண்டும். எப்பொருளிலும் பற்றுவிடுதல் ஒன்று. தெளிவடைந்த அறிவு உடைத்தாதல் மற்றொன்று. இவ்விரண்டுமே ஆன்மாவுக்குப் பெருஞ் சத்தியை யீந்து முத்தியடைதற்குச் சாதகமாகின்றன. இதனைக் கம்பர்;

அருஞ் சிறப்பமை வருந்துறவு மவ்வழி
தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவுமாய் வரும்
பெருஞ் சிறகுள வெனிற் பிறவி யொன்றுமிவ்
விருஞ்சிறை கடத்தலி னினியது யாவதே

என அருளியது கவனிக்கத்தக்கது. பற்றுவிட்டு ஞானமடைந்த ஒருவனுக்கு நல்லாரிணக்கம் அத்யாவசியம். அன்பர்களுறவு அவனைப்பற்றியிருந்த மலங்கள் மீண்டுஞ் சாராமலிருக்கச் செய்கின்றது. "சார்புணர்ந்து சார்புகெடவொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தருநோய்" என்பது திருவள்ளுவ ராணையன்றோ? எல்லாப் பொருட்கும் சார்பாயுள்ளவன் செம்பொருளாகிய இறைவன். அவன் மாட்டன்புடையார்தாம் பிறருக்குற்ற துணையாவார்கள். அவர்களுறவே உண்மைப்பயனை அளிக்கும். "இணக்கமறிந்திணங்கு" என்று ஔவையாரும் கூறினர். இணக்கமுண்டாவதற்கு முன்னே அவர்களது குணங்களையும் செயல்களையும் ஆராய்தல் வேண்டும். நம் நற்குணங்களையும் நற்செயல்களையும் அழிக்கவல்லாராயின் அவர் தம்மை விட்டு நீங்குதல் நன்மையாகும்.

உயிர் இவ்வுலகின்கண் ஓர் உடலோடு தோன்றுகிறது. அவ்வுடலோ அவ்வுயிர்க்கு இருவினைகளால் வருவது. இருவினைகளின் செயல் தீயதாகவே காணப்படுகின்றது. உடல் மாயா சம்பந்த மாதலால் மலவழுக்கு மிகுதியுமுடையது. மாயையால் ஆக்கப்பட்டதனால் சரீரத்தை மாயேயம் என்பர். இம்மலங்கள் நல்லுணர்ச்சியில் உயிரைச் செலுத்தவில்லை. இறைவனருளால் இவற்றின் குணங்களை யுணர்ந்த

ஒருவன் இவற்றினின்றும் நீங்க யத்தனிப்பான். முயலுந் தோறும் இம்மலங்கள் அவனை வெருட்டிப்பற்றும். அவ் வமயங்களில் இவைகளை வென்றவர்களது உறவுவேண்டும். அவர்கள் பரஞானவுணர்வுடையவர்கள். அவர்களினத்துப் போந்த காலத்து வினைதன் செயலற்று நிற்கும்.

> "மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ்
> சிறப்பிலார் தந்திறத்துச் சேர்வை—மறப்பித்துப்
> பத்தரினத்தாய்ப் பரனுணர் வினாலுணரும்
> மெய்த்தவரை மேவா வினை"

எனவரும் சிவஞானபோத வெண்பாவாலறிக. பத்தர்கள் யாவர்? யான்எனது எனும் இருவகைப்பற்று மற்றவர்கள், தமக்குத்தலைவனைப் பதிஉண்டு என்றும், உலகஞானமாகிய பசுஞானத்தாலும் ஆன்மவறிவாகிய ஞானத்தாலும் அவனை அறியமுடியாதென்றும் கண்டவர்கள். அவனருளே கண் ணாகக் காணுதலாகிய பதிகரணம் பெற்ற செம்மையாளர் கள். பதி என்பது இரண்டு-நான்கு கால்களுடைய பசுக் களுக்குத் தலைவன் எனப்பொருளாகும். அவனது அருளைப் பெற்று அவனை யறியலாம். அவ்வாறு அறியும் மெய்யன் பர்களைத் துன்பங்கள் சாரா. இறைவனது கரணங்கள் ஏன் பெறுதல் வேண்டுமெனின் அவன் அசிந்திதன் என்றழைக்கப்படுகின்றான். சிந்திக்க முடியாத தன்மை அவனது இயல்பு. "மாற்றம் மனங்கழிய நின்ற மறை யோன்" என்பது மணிவாசகம். ஆகவே அவனது சக்தி ஆன்மாவிடத்துப் பதிந்த மாத்திரத்தினாலன்றி அவனை யறிதல் கூடாது. சிவகரணம் பெற்ற உயிர்கள் அன்புப் பெருக்கினால் உள்ளமுருகும் செயலுடையவராய்க் காணப் படுவர். சிவவேடத்தைச் சிவனுருவாய்ப் பாவிப்பர். இதனை அருணந்தி சிவாசாரியர் தாமருளிய சிவஞான சித்தியாரில்,

> "அறிவரியான் றனையறிய யாக்கை யாக்கி
> யங்கங்கே யுயிர்க் குயிராயறிவு கொடுத்தருளாற்
> செறிதலினாற் றிருவேடஞ் சிவனுருவே யாகுஞ்
> சிவோகம் பாவிக்கு மத்தாற் சிவனுமாவார்

குறியதனை லிதயத்தே யானைக் கூடுங்
கொள்கையி னலானவர் குறியொடு தாமழியும்
நெறியதனாற் சிவமேயாய் நின்றிடுவ ரென்றால்
நேசத்தாற் றொழுதிடுநீ பாசத்தார் விடவே."

என்று விளக்கி யுள்ளமை நோக்குக. இறைவனது கரணங் களடைந்த உயிர் சிவோகம்பாவனையினால் சிவமே யாகும். இச்சித்தி யடைந்த உயிரின் கண்ணே தயிரின்கண் நெய் போன்று சிவன் சிறந்து விளங்குகின்றான். மற்ற உயிர் களின்கண்ணே பாலின் நெய்போல மறைந்திருக்கின்றான். அகரம் எல்லா வெழுத்துக்களுக்கு முள்ளீடாய் மறைந் துள்ளது. அகரம் ஆகாரத்திலும் இகரத்திலும் மறைந்து நிற்குந் தன்மையைக் காண்கின்றோம். அங்காப்பினால் வருவது அகரம். மற்ற வெழுத்துக்கள் அங்காப்பல்லாது பிறவா. அது போன்று உள்ளீடாய் இறைவன் நின்று லன்றி யாதொன்றும் நிகழாது. பக்குவப்பட்ட ஆன்மாக் களதுள்ளத்தில் மிக்க விளக்கமாக வீற்றிருக்கின்றார். அவ் விளக்கத்தை அவ்வான்மாக்கள் கொள்ளும் சிவவேடம் அறிவிக்கின்றது.

சிவவேடப் பொலிவு இரண்டு சாதனங்களினாலே பெறப்படுகின்றது. ஒன்று வெண்மை தங்கிய திருநீறு. மற்றது உருத்திராக்கம். விபூதியுடைய பேதங்களும், அதை உண்டாக்கும் திறமும் பெரிய புராணத்துள் முழுநீறு பூசிய முனிவர் புராணத்தின்கண்ணே கண்டு கொள்க. இப் பெருஞ் சின்னம் ஐசுவரியத்தை மாத்திரம் கொடுக்கும் தன்மையுடையது அன்று. இறைவனது விளக்கத்தையும் உண்டு பண்ணும் பொருளாகும். இறைவனது திருவடி களைப் பற்றுக் கோடாய்க் கொண்டு ஒழுகும் தூய்மை யுடையவன் என்று காட்டும். காத்தற்றொழில் மேற் கொண்டதாதலின் இரக்ஷை என்பர் அறிஞர். உலக வழக் கில் பேய் பிசாசுகளை ஓட்டுகின்றவர்கள் விபூதியை யணிந்து மந்திரங்களைச் செபிக்கும் தன்மை கண் கூடு. வைதீகக் கலியாணத்திலும் கங்கணத்தின்மீது விபூதியை வைத்து மங்களத்தை உண்டாக்குகின்றனர். உபநிஷத்துக்களில் 13 உபநிஷத்துக்கள் விபூதி மோக்ஷ சாதனமென்று கூறும். உருத்திராக்கமும் இறைவனுடைய திருக்கண்களினின்று

உற்பவித்து, அணியும் அன்பர்களது அன்பின் திறத்தைக் காட்டுஞ் சிறப்புடையது. ஆகவே இவ்விரு பெரும் பொருளும் விளக்க முடைமையாற் சிவமே. வேடத்தாற் சிவமேயாயினும் உள்ளத்தாலும் சிவமாதல் வேண்டும். உள்ளம் நினைக்கும் தன்மையது. மற்றக் கரணங்களோடு கலந்து நின்று தொழிற்படும் பான்மையது. உள்ளே நினைத்து அன்பினாலே கசிந்து விழிநீர் பெருக்கி வேதங்கள் நான்கினும் மெய்ப்பொருளாகி விளங்கும் இறைவன் நாமமாகிய திரு ஐந்தெழுத்தை வாயாரச் சொல்லல் வேண்டும்.

இவ்வாறு சிவவேடம் தரித்துக் காதலாற் கசிந்து சிவ மந்திரத்தை ஓதும் அன்பர்களது உள்ளத்தின் கண்ணே அருளாற் கலந்து நிற்றலால் அவர்கள் சிவமேயாவர். சிவோகம்பாவிக்கும் முறைமையால் பாவனை வயத்தராய்ச் சிவமாதல் திண்ணம். இறைவனை வழிபடுங் காரணமாக அன்பர்கள் தங்கள் உள்ளக்கிழியில் திருவுருவத்தை வைத்துத் தியானித்துக் கூடுஞ் செயலினாலும் சிவமே யாவர். சிவமே யெனநிற்குங் காரணத்தால் தன்மையானும் சிவமே ஆக வேடத்தாலும், பாவனையாலும், செயலாலும், தன்மையாலும் சிவமாம் அன்பர்க்கு உலகச் சார்பு இல்லை. அவர்கட்குக் குலமும் கர்மமும், தாமே நழுவிச் செல்கின்றன. அதிவருணாச்சிரமிகளாகையினாலே அவைகள் அவர்களைப் பந்தப்படுத்துவதில்லை. அவர்களது நினைவு எல்லாம் இறைவனது திருவடியே. ஆராத காதல் செலுத்தும் பேரன்புடையவர்கள் எந்த நாட்டவராயினும் அன்புடையவராயின் திருவடிசாரும் தகைமையர். அவர்களது பெருமையும் அளவிடுதற் கொண்ணாது. அவர்களும் கணக்கிறந்தவர்கள்.

"கருங்கடலைக் கைநீந்துக் கொளவெளிது முந்நீர்க் கடற்கரை நொய்ம்மணலை யெண்ணி யளவிடலாம், பெருங் கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென்றெண்ணிப் பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்து விடலாகுந் தருங் கடலின் மீனை யளவிடலாகும், வானத் தாரகையை யளவிடலாஞ் சங்கரன்தாள் தமது சிரங்கொள் திருத்தொண்டர் புராணத்தை யளவிடநஞ் சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்குமரிதே" என உமாபதி சிவாசாரியர் கூறும் உயர் மொழியினாலே திருத்தொண்டர்களது பெருமைகளையெல்லாம் அளவிட்டுக் கூறுவது முடியாதென அறிகின்றோம்.

திருத்தொண்டர்கள் அளவிறந்த பெருமையுடையவர்கள். அவர்களது வரலாற்றைக் கூறும் புராணம் பெரிய புராண மாகும். எனவே அது பெருமையுடையது. அப்பெருமை உலகத்தாருக்கு இறைவனால் காட்டப்பட்டதே. பெரிய புராணம் என்பதற்குப் பல பெரியவர்களது சரிதங்களைத் தொகுத்துச் சொல்லும் புராணம் எனப் பொருள் கூறுவாருமுளர். சேக்கிழார் சுவாமிகள் இப்புராணத் துக்குத் திருத்தொண்டர் புராணம் எனப் பெயரிட் டருளினார். 'எடுக்குமாக் கதை' யென்னும் திருப்பாட் டின் கண்ணே "மாக்கதை" என்னும் பிரயோகத் தால் பெரிய புராணம் எனும் பெயர் வழங்குவதாயிற்று என்பர். புராணம் என்பதனை நம்மவர்கள் பழமையான கட்டுக் கதைகள் என்று கருதுகின்றனர். புராதனம் எனின் பழையது என்று பொருள்படும். புராதன மென் பதே புராணம் என மருவிற்று என்று சொல்லுவர். புரா என்னும் சொல்லுக்கு ஜீவனம் என்ற பொருள் உண்டு. நம்மை நன்னெறிகளிலே செலுத்தி ஜீவிக்கச் செய்யும் ஆற்றலுடையது புராணம். நூற்கள் 3 பாகுபாடுகளுக்குள் அடங்கும். எஜமான் கட்டளையிடுவது போன்று விளங்கும் நூல்கள் சில. அதனை பிரபு சம்ஹிதா என்பர். சிநேகப் பான்மையோடு அறிவு புகட்டும் நூல்கள் சில. இவை சுகிர் சம்ஹிதா என்றழைக்கப்படும். மனைவியின் போற்று உகந்த கருத்துக்கள் நிரம்பும் வல்லமையுடைய நூல்கள் சிலவற் றைக் காந்தா சம்ஹிதா என்பர். வேதம் பிரபு சம்ஹிதா ; புராணம் சுகிர்சம்ஹிதா ; காவியங்கள் காந்தா சம்ஹிதா. இரண்டாம் பாகுபாட்டின்கண் படுவன புராணங்கள். பெரிய புராணமோ சிவமாகிய திருவைப் பெற்றவர்களின் சத்திய சம்பந்தமான சரிதங்கள்.

இச்சரிதங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் நல்வழி இச்சியாது சென்று கொண்டிருப்பவனைத் திருத்திச் செந் நெறிக்குச் செல்லும்படி செய்விப்பன. சோழநாட்டை முறை செலுத்தி வந்த அநபாயச் சக்கரவர்த்தி என்பான், காவிய இலக்ஷணங்கள் பெற்றுள்ளதான சீவக சிந்தா மணியை நாடோறும் அன்போடும் கேட்கும் நியமமுடைய வனாக இருந்தான். அவன்பால் முதன் மந்திரியாயிருந்த சேக்கிழார் பெருமான் அரசனை நோக்கி இக்கதை சமணர்

பொய்ந் நூல். இம்மைக்கும் மறுமைக்கும் ஆகாது. "வளம் மருவுகின்ற சிவகதை இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி." அதனைக் கேட்பாயாக என்று அறிவுறுத்தினர். அரசனும் அதற்கியைந்து அக் கதைகள் யாவை? சொல்லுக எனக் கூறச் சேக்கிழார் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையுள் அருளிய அடியார்களது வரலாற்றினை முற்றும் எடுத்துப் புகன்று, அதற்கு வகையாக நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியினுக்குப் பொருள் கூறினர். உள்ளன்போடு உருகிக் கேட்டவனை அரசனும் மகிழ்ந்து இச்சரிதங்களையெல்லாம் விரிவாக எழுதித் தரல்வேண்டும் என்று வேண்டினன். சேக்கிழார் சுவாமிகளும் இது திருவருட் செயலென்று கருதி அவன்பால் விடைகொண்டேகிச் சிதம்பரஞ் சென்று தில்லைக் கூத்தனை வணங்கி அவன் தந்த " உலகெலாம் " என்னும் முதலைக் கொண்டு அரும்பெரும் புராணமாகிய இப்புராணத்தினை முடித்தருளினர். அதனுடைய சிறப்பு,

" பூவை மறந்தனள் வெண்டாமரை மயில்புகல்தரு
சங்கப் புலவோர்சொற்
பாவை மறந்தனள் தேசசுபாடித பயனை
மறந்தனள் பதுமத்தோன்
நாவை மறந்தனள் பொதியமலைத்தலை நண்ணிய
புண்ணிய முனிவனெனுங்
கோவை மறந்தனள் சேவையர் காவலனர்
திருநாவிற் குடிகொண்டாள் "

எனவரும் திருப்பாட்டினுற் கண்டு தெளிக. அன்புப்புராணமாய் இறைவனுடைய அருளைத்தான் பெற்று விளங்குவதோடு படிப்போர்க்கும் திருவருளைக் கூட்டுவிக்கும் செயலுடைமையான் இப்புராணம் சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாவதாகச் சேர்க்கப்பட்டது. முறையென்பது புத்தகம் எனப் பொருள்படும். ஒழுக்க முறைகளைத் தெரிவித்து ஆத்மஞானத்தைக் கூட்டவல்ல நூல்கள் திருமுறையாம். எல்லாப் பொருளும் அடங்கிய காரணத்தால் முதல் ஏழு திருமுறைகளுக்கும் அடங்கன்முறை எனப் பெயர்

வழங்கலாயிற்று. இதன்கண் உள்ள தேவாரங்களையெல்லாம் நன்குக உணர்ந்து அவற்றில் திளைத்து அரிய பொருள்களையெல்லாம் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தின் கண்ணே விளக்குவாராயினர். இனி பெரியபுராணச் செய்யுள்களின் நயம் சிலவற்றை ஆராய்வாம்.

அருள் வயமாய் நின்று பாடிய புராணமாதலின் அரிய கருத்துகள் அடங்கிய பாடல்கள் பல உள்ளன. இவைகளிலொன்று குமரகுருபர சுவாமிகளை ஆட்கொள்ளும் திறம் வாய்ந்தது. அது,

" ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங்
கரணங்கள் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்துவிகமே யாக
இந்துவாழ் சடையா னுடுமானந்த வெல்லையில்
தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத் துட்டிளைத்து மாறிலா
மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

எனும் அருமைத் திருப்பாட்டாகும். குமரகுருபரர் பாண்டிய நாடு முழுமையும் ஆங்காங்குள்ள திருக்கோயில்களைத் தரிசித்து அதனினின்றும் அகன்று சோழ நாட்டை அடைந்தார். திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் முதலிய தலங்களை யெல்லாம் தரிசித்துத் தருமபுர ஆதீனத்தின்கண் வீற்றிருக்கும் மாசிலாமணி தேசிகரது பெருங் கீர்த்தியைக் கேள்வியுற்று அவரைத் தரிசித்தற்பொருட்டு ஆங்குச் சென்றனர். இருவரும் உரையாடிய இறுதியிலே மாசிலாமணித் தேசிகர் மேற்கூறிய திருவிருத்தத்திற்கு அனுபவப் பயனை வினவ, வாக்குத் தடைப்பட்டது. குமரகுருபரர் முன்னர் ஷண்முகக் கடவுள் சொல்லிய வண்ணம் இவரே தமது குருமூர்த்தியாவார் என்று நினைந்து மனங் கலங்கி இருக்கை விட்டெழுந்து சாஷ்டாங்கமாக அவரை வணங்கித் தம்மை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். அவரது ஆணவ மலத்தின் செருக்கை அறுப்பதற்கு எழுந்ததோர் உபாயமாக இத்திருப்பாடல் விளங்கிற்று. அப்பாடலின் கருத்தை அவ்வருட் புலவரே விளக்க விழித்தா

ரெனின், நம்மவர் விளக்க முயற்சிப்பது நகையினை நிறுத்தும்.

" தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்க டொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான்."

"கையுந்தலைமிசைபுனையஞ்சலியன கண்ணும்பொழிமழைபொழியாதே
பெய்யும் தகையன கணங்களுமுட னுருகும்பரிவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன்பெழுதருமின்றாழ்சடையொடுநின்றாடும்
ஐயன் றிருநடமெதிர்கும் பிடுவாரார்வம் பெருகுதலளவின்றால்"

இவை இரண்டும் சீரழகுடையன. பாட்டின் சந்தம் தங்கு தடையின்றிப் பேசுவதுபோல் ஒழுகுகின்றது. சிலேடைகளும் மடக்குகளும் பொருந்தியுள்ள பல பாட்டுக்கள் பெரியபுராணத்தில் உண்டு.

சேக்கிழார் சுவாமிகள் மற்ற புலவர்களைப் போலல்லாது தமது புராணத்தின்கண்ணே பல நாடுகளையும், பல ஆறுகளையும் வருணிக்க வேண்டியிருந்தது. ஒரு நாடு, ஒரு நகரம் இத்தன்மையாகத்தான் வர்ணித்தல் வேண்டும் என்பதனை வழிகாட்டியாக அவர் அறிவித்தார். திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள் தொண்டை நாட்டின் சிறப்புப் போதிய சான்றாகும். இலக்கணத்திற்கும் இலக்கியமாக இப்புராணம் விளங்குகின்றது. இவ்வருமைப் பாட்டைத் திரிசிபுரம் மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் அருளிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில் காப்புச் செய்யுளில் " வினையுருபு தொகை நான்கனடியாதி செய்து " எனப் போற்றினமை கண்டு தெளிக. 'உலகெலாம்' என்னும் திருவிருத்தத்தின் நான்காவது அடியிலே 'மலர் சிலம்படி' என்னும் சொற்றொடர் அவர் கூறிய இலக்கண அழகை உடையதாக உள்ளது. இத்திருவிருத்தத்தில் மற்றொரு அழகையும் காண்கிறோம். இது அறுபத்துமூன்று எழுத்துக்களினால் ஆக்கப்பட்டுள்ளது. இப்புராணத்துள் கூறப்படும் தனியடியார்களின் கணக்கு

அறுபத்து மூன்றே. சிதம்பரத்தின் அருமையையும் இது கூறுவதாகும். இறைவனுடைய உருவங்கள் மூன்று. அவை அருவம், அருவுருவம், உருவம். இம் மூன்று உருவங்களையும் தாம் சிதம்பரத்தின்கண்ணே பெற்றிருப்போமென்று இறைவன் அருளினர். 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்பது அருவ நிலைமை. 'நிலவுலாவிய நீர் மலிவேணியன்' என்பது உருவத்தைக் குறிக்கும். உருவம் உடையனாய் அவயவப் பாகுபாடின்றி இருத்தல் அருவாருவமாகும். அதுவே 'அலகில் சோதியன்' ஆகுந்தன்மை. இவைகளுக்கு அப்பாற்பட்ட நிலைமையே சிதாகாசத்தில் ஆடுங்கோலம். இனி, ஒரு செய்யுளின் பொருட்பயனைக் கவனிப்போம்.

"வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகம் நோக்கி மன்னுசிற் றம்பலத்தே
யாதியு முடிவுமில்லா வற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும் நலத்தின் மிக்கார்."

என்பது திருநீலகண்ட நாயனார் புராணத்துள் முதற்றிருப்பாட்டு. தில்லை என்பது சிதம்பரம். அதனைக் கோயில் என்று வழங்கினர் ஆன்றோர். மற்ற தலங்களெல்லாம் காரணப் பொருட்டாலோ அல்லது வழக்கத்தாலோ வரும் பெயர்களையுடையன. அவ்வாறின்றி இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம் இதுதான் என்று குறிப்பதுபோல் கோயில் என்று அமைந்தது. வடமொழியில் ஆலயம் என்பர். ஜன்ம சரீர மனசிரமவொடுக்கம் ஆலயமாகும். எல்லா நகரங்களும் முதன் முதலிலே காடாக இருந்தன. காடுகள் அழிந்த பின்னரே நாடுகள் வந்தன. மதுரையும் குலசேகர பாண்டியனால் கடம்பவனம் அழிக்கப்பெற்று உண்டாயது. சிதம்பரமும் முன்னர் தில்லை வனமாக இருந்தது. தில்லையென்பது ஒரு செடி. அவ்வனம் ஒழித்தலுமே நகரமாயிற்று. அறிஞர்கள் குடியேறினர். அறிஞர்களே வேதியர். அவர்களே தில்லைவாழ் அந்தணர்கள். வேதியர் என்பதனைச் சிவபெருமான் என்றும் கொள்ளலாம். அவரே எல்லா அந்தணரினும் மேம்பட்ட அந்தணர் என்று வேதங்கள் அறைகின்றன. இந்நகரமோ மிகவும் பழைமையானது. ஆகவே அது

மூதூர். 'தில்லை மூதூர் ஆடிய திருவடி' எனும் மாணிக்க வாசகம் நோக்குக. வேள் என்பது மண் என்று பொருள் படும். கோவர் பிசைபவர். மண்ணைப் பிசைந்து குடம் முதலியன வனைபவர்கள் குயவர். இப்பெருங் குலத்தின்கண் வந்தவர் திருநீலகண்ட நாயனார். வந்தவர் என்னும் பதத்தினால் அவதரித்தார், விண்ணினின்றும் இறங்கினார் என்பது கருத்து. இம்முதலடியில் ஊரும், அதனது தொன்மையும், வாழ்பவர்களின் பெருமையும், திருநீலகண்ட நாயனார் அவதரிக்கத் தவத்தையுடைய குலமும் கூறப்பட்டது. இந் நாயனார் எத்தன்மையர் என்பது பின் மூன்று அடிகளில் விளக்கப்படுகின்றது. இவர் தில்லைக் கூத்தப்பிரானது திருவடியிலே வணங்கும் மேன்மையுடையவர். இறைவர் இங்குத் தனிக்கூத்தாடுபவர். அக்கூத்து இவ்வுலகின்கண் ஆடப்படுகின்ற கூத்தல்லாமையான் தனிக்கூத்து எனப்பட்டது. யாவரும் இரண்டு கால்களினாலே கூத்தாடுவது பழக்கம். இறைவரோ ஒற்றைக்காலினால் ஆடும் தன்மையுடையவர். கனகசபையின்கண்ணே வலக்காலை ஊன்றி இடக்காலை உயர்த்தியிருப்பர். வெள்ளியம்பலமாகிய மதுரையின் கண்ணே இடக்காலை ஊன்றி வலக்காலை உயர்த்தியிருப்பர். கால் மாற்றியிருப்பது ஒரு பாண்டியனுக்கு அருள்செய்யும் பொருட்டே. பொன்னுக்கு, வெள்ளி கால் மாற்றிருக்கும் எனும் முதுமொழி இதனை விளக்குவதாகும். ஆரியர் இரண்டுகாலால் நடைபெறுங் கூத்துக்கு லாஸ்யம் என்பர். ஒற்றைக்கால் கூத்துக்கு அகத்தியர் தாண்டவம் எனக் கூறுகின்றனர். இக்கூத்தோ ஆன்மாக்களுக்குச் சாந்தியை உண்டுபண்ணுவதால் சாந்திக்கூத்தே. சாந்தி என்பது மனத்தெளிவு. தெளிவு ஞானமே. எனவே இறைவன் செய்யுங் கூத்து அற்புதக்கூத்து. அற்புதம் என்பது ஞானம். கூத்துகளெல்லாம், பாவம், இராகம், தாளம் இவை மூன்றினையும் தழுவி நிற்கும். இதுவே பரதமாம். இது நடிக்கப்படும் இடம் பூமியாகும். இறைவன் செய்யுங்கூத்தோ இம் மண்ணின் மீதன்று. ஆகாசத்தின் நடுவில் இயற்றுகின்றானென்று ஆன்றோர் மொழிந்தனர். ஆகாச மத்தியிலே சம்பு தியானிக்கப்படுகிறான் என்று சுருதிகள் கூறுகின்றன. தியானிக்கப்படும் பொருளாகையினால் இவர் அருள் செய்யும் மூர்த்தியாவர். இவர் செய்யும் நடனமும் பிறர் நலத்

தையே கருதிச் செய்யப்படுகின்றது. இக்கோலம் வேறு எந்தச் சமயத்திலும் காண்பது அரிது.

அன்பர்க்கு அருள் செய்தற்பொருட்டே இறைவன் உமாதேவியை நோக்கி ஆநந்த நிருத்தம் புரிகின்றார். இந் நிருத்தத்தின் கருத்து என்னே? ஆன்மாக்களைப் பற்றி நிற்கும் மலங்கள் மூன்று. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இம்மூன்றின் கட்டினின்றும் விடுபடுவதே வீடாகும். இவ்விடுதலையை அடையச் செய்வது இறைவன் நிருத்தக்கோலம். மாயையைத் தமரகம் ஏந்திய திருக்கரத்தினாலே நீக்கி, அக்கினி ஏந்திய திருக்கரத்தினால் கன்மமலத்தைச் சுட்டு, முயலகன்மீது ஊன்றிய பாதத்தினால் ஆணவமலத்தை அழுத்துகின்றனர். இவ்வாறு மூன்று மலங்களையும் ஒழித்தவர்க்குக் குஞ்சிதபாதத்தினால் அருளைத் தந்து அமைத்த திருக்கரத்தால் அந்தமில் இன்பவீடெய்துமாறு சேர்ப்பிக்கின்றார். இதுவே இறைவனது திருக்கூத்து முறைமை. இக் திருக்கூத்து ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைதல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை நிகழ்த்தும்.

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டுமலஞ்
சாய வமுக்கியருடா னெடுத்து—நேயத்தால்
ஆநந்த வாரிதியிலான் மாவைத் தானழுத்தல்
தானெந்தையார் பாதந் தான்"

"தோற்றம் துடியதனிற் றோயுந்திதி யமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
வூன்று மலர்ப்பதத்திலுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"

எனவரும் திருப்பாட்டுகளால் இறைவனது கூத்தின் அருமை கண்டு தெளிக. இவையாவும் இறைவன் அருட் செயல். இறைவன் அருளே எல்லாஞ் செயவல்லது. உலகத்தை ஆள்விக்கச் செய்வதும் அதுதான். பிறப்பறுப்பதும் அதுவே. எல்லாப் பொருளுமாவதும் அதுவே.

அருளே யுலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்ப றுப்பதானல்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு

எனும் காரைக்காலம்மையாரின் செய்யுளால் உணர்க.

இவ்வருட்டன்மை வாய்ந்த கூத்து ஆதியும் முடிவும் இல்லாதது. இறைவன் ஆதியும் அந்தமுமில்லாதவனுதலின் அவனது கூத்தும் தோற்றமும் இறுதியும் இல்லாததாயிற்று. தான் ஆனந்தவடிவினனுய் உயிர்களை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கும்படிச் செய்கின்றமையால் அவனது கூத்து தனிக் கூத்தே. அக்கூத்தைத் தரிசிப்போர் தாங்கள் கொண்ட குறிக்கோள் பெறுவதுதிண்ணம். காண்கிற செயலும் இறைவன் காட்டநாம் காண்பதேயொழிய நம்மால் இயலுவதன்று. இறைவன் நிருத்த கோலத்துத்தன் திருவடியைக் கரத்தால் காட்டி உங்கட்கு அருள் புரிவேன் எனும் தன்மையை அபயகரத்தால் விளக்குகின்ருன். எனவே உயிர்கள் சுதந்தரமற்றவர்களாய் விளங்குகின்ருன். எனவே உயிர்கள் சுதந்தரமற்றவர்களாய் இறைவனுல் ஆட்டப்பெறும் தகுதிவாய்ந்தவர்கள். அதனுலன்றே மாணிக்கவாசக சுவாமிகள்,

" வானுகி மண்ணுகி வளியாகி ஒளியாகி
ஊனுகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனுகியான் எனதுஎன்று அவரவரைக் கூத்தாட்டு
வானுகி நின்ருயை என்சொல்லி வாழ்த்துவனே"

எனத் திருவாசகத்துள் அறிவுறுத்துள்ளார். உயிர்களை ஆட்டும் திறம் இறைவனிடத்தினின்றும் வெளிப்படுகின்றது. இவ்வாட்டங்களெல்லாம் அவரவர்கள் மதத்துக்கேற்ப நிற்கும். சில வருடங்களுக்குமுன் காட்டப்பெற்ற தான பொய்மையாட்டங்கள் எடுத்துக்கொண்ட நாடகங்களுக் கேற்ப மறைந்திருக்கும் சூத்திரதாரனுல் ஆட்டப் பெற்றன. கதைக்கேற்ப ஆட்டங்கள் நிகழுமே தவிர வேறு வகையாக நிகழ்வது அரிது. உயிர்கள் நாடகமும் கன்மத்தின் வழியேதான். மறைந்திருக்கும் சூத்திரதாரன்போல் இறைவனும் மறைந்து நின்று உயிர்களை ஆட்டுவிப்பான். இறைவனது கூத்தோ வேருெருவர் மறைந்து நின்று அவரை ஆட்டுவிக்கும் செயலால் ஆவதன்று.

பரதநாட்டியத்தின்கண்ணே ஆடுகின்ற ஓர் மகளுக்குப் பின்னே ஒரு நட்டுவன் தாளம்கொட்டி அவள் பாவனைகளையெல்லாம் இசைக்கு ஒத்தபடி நடிக்கும்படி செய்வன். அச்செயல் செய்யும் ஒரு புருடன் இல்லாமையே இறைவன்

சுதந்திரனாய் நடிப்பன் எனப்பொருள் விளங்குவதாயிற்று. இறைவன் கூத்து பிறர் நலங்கருதிச் செய்யப்படுவதாயும் என்றும் முடிவில்லாததாயும் அன்பர்தம்மை ஆனந்தத்தில் மூழ்குவிக்கச் செய்வதாயும் பிறரால் தாம் ஆட்டப்பெறாது சுதந்திரமாய் செய்யப்படுவதாயும் உள்ளது.

இவ்விதம் கூத்தாடும் திருவடிகள் வீரக்கழலை ஆபரணமாகத் தரித்துள்ளன. அது இறைவரது வீரச் செயலைச் செய்வதன் பொருட்டுத் தந்த ஓர் பரிசுபோன்றது. எந்த அரிய செயல் ஒருவனுக்கு நேரிட்ட பயத்தைப்போக்கியதோ அதுவே வீரச் செயலாகும். அதனை மகிழ்ந்து நன்றி காட்டும்பொருட்டாக உலகவர் ஓர் பதக்கமோ அல்லது வேறு ஒரு பொருளோ பரிசாக அவ்வீரனுக்குத் தருவது வழக்கம். அவன் அதனைத் தன் கைகளிலோ, மார்பிலோ, கழுத்திலோ அணிந்துகொள்வான். இறைவன் ஏற்றருளிய பரிசு கரங்களிலும், கழுத்திலும், மார்பிலும் சிரசிலும் அணியப் பெறவில்லை. எந்தத்திருவடி எமனுடைய பயத்தை மார்க்கண்டேயனுக்கு அகலும்படி செய்வித்ததோ, அதனுக்கு அணியப் பெற்றது. என்பது அடக்குபவன் எனப் பொருள் தகும். இறப்பின் துன்பத்திற்கு யாவரும் அஞ்சுவர். அதனை ஒழிக்கும் திருவடியை வாழ்த்தி வணங்குதல் வேண்டும். வாயார வாழ்த்தி நல்ல மனத்தோடு சிந்திக்கும் நலத்தைப் பெற்றவர் திருநீலகண்ட நாயனார். திருநீலகண்ட நாயனார் தில்லையிலே வேட்கோவர் குலத்தில் உதித்தவரென்றும், திருச்சிற்றம்பலத்தின்கண்ணே தாண்டவம் புரியும் இறைவன்மாட்டுத் திரிகரணங்களினாலும் அன்பு செய்கின்றவரென்றும், இச் செய்யுளால் பெறப்பட்டது. இறைவரோ மன்னுயிர்களினாலே அறிதற்கு அருமையானவர். உயிர்களின் துன்பம் போக்குதற்கு இறைவரது அருளானது நேரே பெறப்படுமாயின் உயிர்களுக்கு இறுதியை விளைவிக்கலாம். துன்பம் விளையாது அவைகளுக்கு அதனைப் போக்குதற்கு வழியாக மற்றவர் மீது அவ்வருளைச் செலுத்தி அவர் மூலமாகப் பெறும் அருளே இன்பம் விளைவிக்கும். ஒரு பச்சிளங்குழவிக்கு மிக வேகத்தோடுள்ள ஒரு மருந்தை உண்பித்தோமானால், அம்மருந்து அக்குழவிக்கு இறப்பினைத்தரலாம். ஆனால் அம் மருந்தை அக்குழவியின் தாய்க்குக் கொடுத்து அவளது

கலசங்களில் சுரந்து நிற்கும் பாலின் வழியாகக் குழந்தைக்கு உண்பித்தோமானால் அக்குழந்தையின் நோய் நீங்குவது கண்கூடு. அவ்வாறே இறைவரும் தன் கருணை நோக்கத்தை அம்மையார்மீது செலுத்தி அவ்வருள் மன்னுயிர்களுக்குப் பாவிக்கப்படுகின்றது என்பதனை விளக்க, “ மாதொரு பாகநோக்கி ” என்றார்.

“ பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பின்
அருட்சூல் கொண்ட வையரித் தடங்கட்
டிருமாண் சாயற் றிருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்த ”

என வரும் குமரகுருபரர் ஆன்றமொழிகள் கருதத்தக்கன. பல்லுயிர்களுக்கும தாயானமையால் அம்மையார் உண்ட மருந்து, உயிர்களைப்பற்றிய நோய்களை அறுப்பதற்குச் சாதகம் ஆகின்றது. எனவே இறைவர் நோக்கம் அம்மையார்மீது பட்டு உயிர்களுக்கு உண்மைப் பயனைத் தருவதாயிற்று. இறைவனது தனிக்கூத்து, உயிர்களது நன்மையைக் கருதியே செய்யப்பட்டது.

சைவசித்தாந்தக் கருத்துகளும், அரிய காவிய நயங்களும் அன்புப்பெருக்கும் அருள் மொழிகளும் நிறைந்த புராணங்களுள் சிறந்தது இப் பெரியபுராணம். பல நூல்கள் உண்மைப் பொருளைப் பிறருக்குக் காட்டுவிக்கும் செயலுடைமையின்மையான் அவை நிராகரிக்கப்படவேண்டும். எது அப்பொருளின் இலக்கணங்களை விளக்குவதோ, அதனை அடைவதற்கு விதிகளைக்காட்டி அவ்வாறு ஒழுகிய உயிர்களுக்கு இறைவன் திருவடியை அடையச் செய்வதோ, அதுவே மெய்ஞ்ஞானம் தரும் நூல். அதுதான் யாவராலும் போற்றும் தகைமையது. அத்துணைச் சிறப்பினை வாய்ந்த இப்புராணம் இறைவனுக்கு அன்பு செலுத்தும் நிலைமையைத் தந்து அவனது அருளைப் பெறும்படியாகச் செய்விக்கும் தன்மையுடைத்தாகும்.

ஆறும் திருமுறை*

பொன். கோவிந்தசாமி, மலேயா

" உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் "

தோற்றுவாய்: சிவனருள் பெற்ற சைவ சமய குரவர்கள் இருபத்தெழுவர் கி. மு. 6000 ஆண்டிற்கும் கி.மு. 1041 ஆண்டிற்கும் இடையில் இறைவன் பேரில் பாடிய தோத்திரப் பாசுரங்கள், பிள்ளையாரின் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி என்ற சிவனடியாரால் பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அப்பன்னிரு திருமுறைகளில் திருஞான சம்பந்த சுவாமிகள் பாடியருளிய தேவாரங்கள் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய தேவாரங்கள் இரண்டாவது மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய தேவாரங்கள் ஏழாம் திருமுறையாகவும், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம், திருக்கோவையார் எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திக் காட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டிகள், திருவாலி அமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகிய ஒன்பதின்மரும் செய்த திருவிசைப்பா திருப்பல்லாண்டுகள் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் செய்தருளிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரதேவர், கல்லாடதேவர், கபிலதேவர், பரணதேவர், இளம் பெருமா

---

*கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற ஐந்தாம் திருமுறை மகாநாட்டில் திரு. பொன். கோவிந்தசாமி ஆற்றிய சொல்லாக்கத்தின் சுருக்கம்.

னடிகள், அதிரா அடிகள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார் ஆகிய பன்னிருவரும் பாடிய பாசுரங்கள் பதினொராந் திருமுறையாகவும், சேக்கிழார் பெருமான் செய்தருளிய பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் பகுக்கப்பட்டுள்ளன.

அப்பர் அடிகளின் மாண்பு: அப்பரடிகள் பாடியருளிய 4, 5, 6-ஆம் திருமுறைகளில் ஆறும் திருமுறையைப் பற்றி ஆராய்வதற்கு முன் அடிகளின் மாண்பைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

சைவசமய குரவர்களிலே அப்பரடிகள் தலைசிறந்த தமிழ்ப் பெரியாராவார். அப்பரடிகள் தன் முயற்சியாலும் தொண்டாலும் இறைவன் அருளைப் பெற்றவர்.

மற்றைய சமயகுரவர்கள் போன்று இறைவனைத் தோத்திரம் செய்ததோடுமட்டும் நின்றுவிடாமல் இறைவன் எவ்வுயிர்க்கும் உயிராய் நிற்கும் தன்மையை உணர்ந்து ‘ அன்பேசிவம் ’ என்பதையும், உயிர்ப்பணியே இறை பணி எனவும் உணர்ந்து ‘என்கடன் பணி செய்து கிடப்பதே ’ என்று மக்கள் சேவையிலேயே ஈடுபட்டிருந்தார். அதனாலன்றோ இறைவன் மற்ற சிவனடியார்களைக் காட்டிலும் அப்பரிடம் ஒரு தனி அன்பு வைத்திருந்தார். என்று புராணம் கூறுகிறது. இது உண்மை. ஒரு சமயம் திருவீழிமிழலையில் ஏற்பட்ட பஞ்சத்தைத் தீர்க்க அப்பரடிகள் எடுத்துக்கொண்ட முயற்சியில், இறைவன் சம்பந்தருக்கு வாசியுள்ள படிக்காசு கொடுக்க அப்பரடிகளுக்கு மட்டும் வாசியிலாப் பொற்காசு கொடுத்துதவினர் என்பதிலிருந்து அறியக் கிடக்கின்றது.

மற்றும் அப்பர் எம்மதமும் சம்மதம் என்றசமரச சன்மார்க்கத்தவர், சர்வமத ஆராய்ச்சியாளர். எந்த மதத்திலும் அவருக்குத் துவேஷமில்லை. அதனாற்றான் அவர் “விரிலா அறிவினர்கள் வேறொரு சமயஞ் செய்து எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்கும் ” என்றும், ‘ பருதியானைப் பல்வேறு சமயங்கள் கருதினானை ’ என்றும் பாடியுள்ளார். சைவசித்தாந்த சமயமானது எல்லா மதங்களையும் தன்னுள் அடக்கி நிமிர்ந்து நிற்பதன்றோ? ஆதலின் எந்த

சமயத்தைக் குறை கூறினும் அது சைவசமயத்தையே குறைகூறினதாகும்; ஏனெனின், அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் நின்று வேண்டுவார் வேண்டுவதை அருள்பவன் நமது இறைவனன்றோ!

அப்பர் சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். அவருக்குச் சாதிகுல வேற்றுமை கிடையாது. எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடி அடியார்களுடன் அவர் ஊடாடி வந்தவர். இதுஉண்மை. அவர் வாழ்க்கையை வரலாறு வாயிலாகவும், அவர் அருளிய ' சாத்திரம் பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கண்டு என் செய்வீர்'' என்ற வாக்கினாலும் அறியலாகும்.

அப்பரடிகள் அதர்மத்தை எதிர்த்து நின்ற அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர். 'நாமர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம். என்று பாடிய தீரர். சமயசமூக புரட்சிக்காரர். சிறந்த சிவபக்தர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிகளிலும் பழகி 81 வயது வரை வாழ்ந்த முதிர்ந்த அநுபவ ஞானி.

இன்னோரன்ன மாட்சி மிக்க பண்புகளையுடைய அப்பரடிகளின் அருள் வாக்குகள் ஆராயற்பாலன.

அப்பர் திருமுறைகளின் பகுப்பு: அப்பரடிகள் பாடியருளிய தேவாரங்கள் மூன்று திருமுறைகளாக, அதாவது 4, 5, 6 திருமூறைகளாக வகுக்கப்பட்டுள்ளன வென்பதைப் பார்த்தோம். அவை பாட்டின் பண் அமைப்பைக் கொண்டும் அவற்றில் எடுத்தாளப்பட்டப் பொருள்களைக் கொண்டும் அவ்வாறு மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. பண் வழி பார்க்கும்போது கொல்லி, சாதாரி, இந்தளம், காந்தாரம், பழந்தக்கராகம், சீகாமரம், பியந்தைக் காந்தாரம், பழம் பஞ்சுரம், குறிஞ்சி என்ற 9 பண்களாய தேவாரப் பதிகங்களை நான்காந் திருமுறையாகவும், குறுந்தொகைப் பதிகங்களை ஐந்தாம் திருமுறையாகவும், திருத்தாண்டகப் பதிகங்களை ஆறுந் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன. பொருள் வழி பார்க்கும்போது எல்லாப் பொருள்களும் எல்லாத் திருமுறைகளிலும் பொதுவாக விரவியிருந்தாலும்,

சிறப்பாக, இறைவனின் அருவுருவத் திருமேனிகளையும், அவரின் திருவிளையாடல்களையும் வருணித்தல் நான்காம் திருமுறையிலும், நெஞ்சறிவுறுத்தல் இறைவன் அருள் வேட்டல் முதலான விஷயங்கள் ஐந்தாம் திருமுறையிலும், வேதாகமங்களிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் உள்ள பொருள்களை ஆறும் திருமுறையிலும் வைத்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

திருத்தாண்டகச் சொற்பொருள் : சாத்திரக் கருத்துக் களை அடக்கியுள்ள இத் திருத்தாண்டகத் தோத்திரப் பகுதி யாகிய ஆறும் திருமுறையைப் பற்றி இனி ஆராய் வோம்.

"திருத்தாண்டகம்" என்ற சொற்றொடரிலுள்ள "திரு" என்ற பதத்திற்குத் தெய்வீகத்தன்மை, மங்களம், பொலிவு, சிவம் எனப் பல கருத்துக்கள் உள்ளன. "தாண்டகம்" என்பது பாக்களில் ஓர் இனம் ஆகும். யாப்பிலக்கணப்படி பாக்களில் வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா எனப் பலவகையுண்டு. பாக்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என ஆறு உறுப்புகளையுடையன. 27 எழுத்துகளுக்குக் குறையாத அடிகளையுடைய பாக்களுக் குத் தாண்டகம் எனப்பெயர். இத்தாண்டகத்தில் அளவு ஒத்த அடிகளையுடைய பாக்களுக்கு "அளவியற்றாண்டகம்" எனவும், அளவு ஒவ்வாத அடிகளையுடையவைகளுக்கு "அளவழித் தாண்டகம்" எனவும் இருவகையுண்டு. ஆதலின் திருத்தாண்டக மென்றால் தெய்வத் தன்மை பொருந்தி மங்களகரமாகப் பொலியும் சிவனைப் பற்றிய பாடல் எனப் பொருந்தும்.

இத்திருத் தாண்டகங்கள் சிதைந்து போனது போக சுமார் 990 பாசுரங்களைக் கொண்ட 99 பதிகங்களாகத் திகழ்கின்றன. "9" என்ற எண்ணே ஒரு குப்த எண் ஆகும். ஒன்பதால் பெருக்கி வந்த எந்தத் தொகையையும் கூட்ட ஒன்பதே வருவதைக் காணலாம். 0, 1, 2, 3, 5, 7 முதலிய எண்களும் மறைபொருள் எண்களாகும். இறைவனே எண்ணுமாய் எழுத்துமாய் நின்றானல்லவோ? நெஞ்சை அள்ளும் இத் திருத்தாண்டகங்களை முறையாகப்

பாடின் பாடுகிறவர் மனத்தையும், பாடக்கேட்பவர் மனத்தையும் பரவசப்படுத்தி உயிரை இறைவன்பால் ஒன்று படுத்தும் தன்மையனவாம்.

நுதலிய பொருள் : இத் திருத்தாண்டகத்தில் இறைவனின் அருவம், உருவம், அருவுருவம் ஆயமுத்திருமேனிகளைப் பற்றியும் எப்படி வருணிக்கப்பட்டிருக்கின்றதென்பதைப் பார்ப்போம். உருவ வருணனை. "வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்" "தலைமாலை தலைக்கணிந்து," "கொல் புலித்தோல் உடுத்தானை," "கார்யானையுரி போர்த்தானை," "சந்திரனுங் தண்புனலும், தாழ்சடையு முடையானை," "விடம்திகழும் அரவு அரைமேல் வீக்கினானை," "விடையேறி கடைதோறும் பலிகொள்ளும் உமையொரு பாகத்தானை" என்பவை போன்ற திருத்தாண்டகங்கள் இறைவனின் உருவத்திருமேனிகளை வருணிக்கின்றன.

சிவன் சூலம், மான், மழு, கனல், உடுக்கை முதலிய ஆயுதங்களை ஏந்தி நிற்கின்றான்; கொல் புலித்தோலும், யானைத் தோலும், கோவணமும் தரித்திருக்கின்றான்; இடப் பாகத்திலும், தலையிலும் அணங்கை வைத்திருக்கின்றான்; தலை ஓட்டையும் எலும்பையும் மாலையாகச் சூடியுள்ளான்: பாம்பையும் மதியையும் ஆபரணமாக அணிந்துள்ளான் என்பவை போன்ற வர்ணனைகளாம். இவைகளெல்லாம் எதைக் குறிக்கின்றன என்ற விளக்கம் வேண்டும். விஞ்ஞான அறிவு மிகுந்த இந்த இருபதாம் நூற்றாண்டில் சிறுவர்களிடம் விளக்கமில்லாமல் இந்தப் பாடல்களைப் பாடச் சொன்னால், உடனே அவர்கள் என்ன! உங்கள் சாமி தலைகளை வேட்டையாடும் ஆதிமலைவாசிகளின் தலைவனோ? தக்கன் தலையை அறுத்தான், பிரம்மன் தலையை கிள்ளினான். தோலாடை உடுத்தியுள்ளான் அப்படிப்பட்ட தெய்வத்தை வணங்கச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டுவிடுவார்கள். அதனாற்றான் இளைஞர்களும் சைவசமயத்தில் ஈடுபாடு இல்லாது இருக்கின்றனர். பிறமதத்தினரும் நம்மை விக்கிரக ஆராதனைக்காரர்கள் என்று இழித்துக் கூறுகின்றனர். விக்கிரகங்களை உடைக்கவும் செய்கின்றனர். இறைவனின் பல்வேறு குணங்களை ஞானக்கண் படைத்த அடியார்கள்

காவியத்திலும், ஓவியத்திலும் கற்பனை செய்து வைத்தனர். சத்தை விட்டுச் சக்கையைப் பிடித்துக் கொண்டதுபோல் நாம் குணங்களை மறந்து குறிகளை மட்டும் அர்த்தமின்றிக் குருட்டுத்தனமாக பிடித்துக்கொண்டோம். விளக்கமில்லாமல் இவைகளைப் பாடுவதைவிட, இப்படிப்பட்ட பாடல்களை விளக்கம் தெரிந்து பாடுவது நன்று.

இவ்வாறே, காமனைக் காய்ந்தது, காலனைக் காய்ந்தது, திரிபுரம் எரித்தது போன்ற பல்வேறு புராணங்களில் கூறப்பட்ட இறைவனின் பலதிருவிளையாடல்களையும் தோத்திரங்களில் வைத்துப் பாடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட புராணக் கதைகளின் தத்துவார்த்தங்களையும் தெரிந்து பாடுதல் நலம்.

அருவுருவ வர்ணனை : "அரியானை அந்தணர்தம் சிந்தையானை" "பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை" "திருவே என்செல்வமே" "தூண்டு சுடரனைய சோதிகண்டாய்" இன்னோரன்ன திருத்தாண்டகங்கள் இறைவனின் சொரூப இலக்கணத்தையும் அவரின் பல்வேறு கல்யாண குணங்களையும் புகழ்ந்து கூறும் பாடல்களாம். பிற்காலத்தில் வந்த பட்டினத்தார், தாயுமானார் பாடல்களையும் இராமலிங்க சுவாமிகளின் அருட்பாக்களையும் கவனிக்கற்பாலது.

நெஞ்சறிவுறுத்தலும் அருள்வேட்டலும் : எத் தாயார் எத் தந்தை 'தந்தையார் தாயார் உடன்பிறந்தார்,' 'பற்றி நின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்' 'திருநாமம் அஞ்செழுத்தும் ஓதாராகில் 'நிலைபெறுமா றெண்ணு தியேல் என் நெஞ்சே' 'அப்பன் நீ அம்மை நீ' என்பன போன்ற திருத்தாண்டகங்கள் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலிய நிலையற்ற உலக வாழ்க்கையின் பயனற்ற தன்மையை நெஞ்சிற்கு நினைவூட்டி இறைவனடிகளில் மனதைச் செலுத்தி மனந்திறந்து முறையிட்டுத் தன்னை ஆட்கொள்ளவேண்டுமென்று இறைவனை வேண்டும் பிரார்த்தனைப் பாக்களாம்.

(தொடரும்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

[பதிவு செய்யப்பெற்றது]

53-வது ஆண்டு விழாவும் மாநாடும்

இடம் : **மயிலம்** (திண்டிவனம் தாலுக்கா)
தேதி : **27, 28, 29** டிசம்பர் **1958**

அறிக்கையும் அழைப்பும்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

பேரன்புடையீர் !

நிகழும் விளம்பி ஆண்டு மார்கழித்திங்கள் 12-ம் நாள் (27-12-1958) சனிக்கிழமை தொடங்கி, மூன்று நாட்கள் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் **53-வது ஆண்டு நிறைவு விழாவும்**, அதன் அங்கமாகச் **சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும், மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின்** அருளாதரவின்கீழ் அன்னார் திருமடத்தில் அடுத்துக் காணும் நிகழ்ச்சி முறைப்படி நடைபெறும்.

இராமநாதபுரம் மாவட்டத் தண்டலாளர் திரு. G. M. முத்துசாமி **பிள்ளை**, I.A.S. அவர்கள் கொடியேற்றிவைக்க இசைந்துள்ளார்கள். சென்னை உயர்நீதிமன்ற **நீதிபதி R. சுப்பிரமணிய நாடார்** அவர்கள் மாநாட்டைத் திறந்து வைக்க இசைந்துள்ளார்கள்.

ஆண்டுவிழாவிற்கும். சைவர் மாநாட்டிற்கும் உயர் திரு. சித்தாந்த சிகாமணி - க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T. அவர்கள் தலைமை வகிப்பார்கள், திருமதி. வித்துவான் - மங்கையர்க்கரசி அம்மையார் அவர்கள் மங்கையர் மாநாட்டிற்கும், வித்துவான் - திரு. அடிகளாசிரியர் அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டிற்கும் தலைமை வகிப்பார்கள். ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்கள்.

அங்கத்தினர்களும், ஏனைய அன்பர்களும், சைவ சபையார்களும் மூன்று நாட்களும் வந்திருந்து உடன் உறையின் பயனைக் கொண்டும், கொடுத்தும் சிறப்பிப்பதுடன், மாநாட்டினைச் சமாஜத்தை வலுப்படுத்தும் முறையிலும் ஆக்க வேலைகளுக்குப் பயன்படும் முறையிலும் நடத்தி வைக்க வேண்டுகின்றோம்.

இங்ஙனம் :

ராவ் சாயிப்-நல். முருகேச முதலியார், *பி.ஏ., சமாஜத் தலைவர்.*

ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ.,எல்.டி.,
ஆ. சோமசுந்தரஞ் செட்டியார், எம்.ஏ.,
சமாஜத் துணைத் தலைவர்கள்.

மா. ப. தியாகராச முதலியார், பி.ஏ.,
சமாஜப் பொதுச் செயலாளர்.

வரவேற்புச் செயலாளர் :

மயிலம் - பொம்மபுர ஆதீனப் புலவர் - வித்துவான் - சி. துரைசாமி அய்யர் அவர்கள், தலைவர்,
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்

நிகழ்ச்சி முறை

விளம்பி மார்கழி 12உ சனிக்கிழமை [27-12-1958]

காலை 7—8 மயிலம் சுப்பிரமணிய சுவாமி சந்நிதியில் வழிபாடும், "ஞானியார் நினைவுமலர்"; "சிவஞான போதம்" என்ற நூல்கள் வெளியீடும்.

,, 8—8½ கொடியேற்று விழா.

,, 8½—12 சமாஜத் தலைவர் முன்னுரை, வரவேற்புரை, திறப்புரை, தலைமைப் பேருரைகள்.

மாலை 4—7½ **சைவர் மாநாடு :** தேவார பாராயணம்.
சொற்பொழிவுகள் :
திரு. மு. அருணாசலம் பிள்ளை, எம்.ஏ. "**சைவ வாழ்வு**"
,, ஜி. கல்யாணம் பிள்ளை, எம்.ஏ. "**திருக்கோயில்**"
,, பேராசிரியர்-தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம்.ஏ., பி.எல்., எம்.ஓ.எல். "**புராணகதைகளும் சைவமும்**"
தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

விளம்பி மார்கழி 13உ ஞாயிற்றுக்கிழமை [28-12-1958]

காலை 7—8 ஆலய வழிபாடு.
,, 8-11 **மங்கையர் மாநாடு :** சொற்பொழிவுகள் :
திருமதி. சு. சிவகாமி அம்மையார் "**எங்கள் தெய்வம்**"
,, வி. பத்மாவதி அம்மையார் "**அன்பில் நாம்**"
,, எஸ். விஜயசரஸ்வதி அம்மையார் "**அம்மையார் கண்ட இல்லறம்**"
,, வ. ஜயலக்குமி அம்மையார் "**சிவபரத்துவம்**"
தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

மாலை 4—7½ **சைவர் மாநாடு :** தேவார பாராயணம்.
தலைவர் முன்னுரை, சொற்பொழிவுகள் :
திரு. எஸ். மீனாட்சிசுந்தர முதலியார், பி.ஏ., எல்.டி. "**சைவமும் எதிர்காலமும்**"
,, பெருஞ்சொற்கொண்டல் - புரிசை - முருகேச முதலியார் "**எது அறம்**"
,, கீ. இராமலிங்க முதலியார், எம்.ஏ. "**திருவெம்பாவை**"
தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

விளம்பி மார்கழி 14உ திங்கட்கிழமை [29-12-1958]

காலை 7—8 ஆலய வழிபாடு.
,, 8-12 **சைவ இளைஞர் மாநாடு :**
திருவாளர்கள் - ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார், வித்துவான் - அம்பை சங்கரனார் அவர்களும், மற்றும் பல இளைஞர்களும் பேசுவார்கள்.
ஸ்ரீலஸ்ரீ சம்பந்தசரணாலயத் தம்பிரான் சுவாமிகள் (சிவக்கவிமணி - திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார்) அவர்கள் ஆசி கூறுவார்கள்.
தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்து.

மாலை 4—7½ ***சைவர் மாநாடு :*** தேவார பாராயணம்.

தலைவர் முன்னுரை, சொற்பொழிவுகள் :

திரு. கு. நடேச கவுண்டர்

"சேக்கிழார் செய்யுட் டிறன்"

,, அடிகளாசிரியர் ***"அயரா அன்பு"***

,, வி. குமாரசாமி அய்யர் **"சித்தாந்த சிகாமணி"**

தலைவர் முடிவுரை, கடவுள் வாழ்த்து.

ஆசியுரை : **ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலைய சுவாமிகள்** ஆசியுரை வழங்குவார்கள்.

நன்றி கூறல் : வரவேற்புச் செயலாளர், மயிலம், பொம்மபுர ஆதீனப் புலவர், வித்துவான்-சி. துரைசாமி அய்யர் அவர்கள்.

ஆய்வுக் கூட்டம் :—மூன்று நாட்களும் இரவு 9 மணிமுதல் 10-30 வரை சித்தாந்த சிகாமணி - திருவாளர் - க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.,எல்.டி. அவர்கள் தலைமையில் ***"அத்துவிதம்"*** என்ற பொருள்பற்றி ஆராய்ச்சி நடைபெறும்.

சமாஜப் பொதுக்கூட்டமும் செயற் கூட்டமும் :—28–12–'58 பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை. (உறுப்பினர்கள் மட்டும்)

"வாழ்க சீரடியாரெல்லாம்"

முக்கியக் குறிப்புக்கள் :—(1) உறுப்பினர்களும் மற்ற அன்பர்களும் தனி அழைப்பிதழ் வராவிடினும் இதையே விசேஷ அழைப்பாகக் கருதி வரவும். (2) மாவட்டப் பிரதிநிதிகள் எத்தனை பேர்களுக்கு உணவு-விடுதி வசதிகள் தேவை என்பதை வரவேற்புச் செயலாளருக்கு முன்னதாகவே தெரிவிக்கவும். (3) உறுப்பினரல்லாதவர்கள் முன்கூட்டியே சமாஜச் செயலாளருக்குக் கட்டணம் அனுப்பி உறுப்பினர்களாக வேண்டப்படுகின்றார்கள். (4) செயற் கூட்டத்திற்குத் தீர்மானங்களை அனுப்ப விரும்புபவர்கள் சமாஜச் செயலாளருக்கு 21–12–'58க்குள் அனுப்ப வேண்டியது. (5) செயலாளர் விலாசம் : 28, இராமகிருஷ்ண மட் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4 என்பது. (6) மயிலம், சென்னை – விழுப்புரம் ரயில்பாதையில் உள்ளது. ரயிலடிக்கும் மாநாடு கூடும் இடத்துக்கும் சுமார் 3 மைல். வண்டி வசதிகள் உண்டு. திண்டிவனம் ரயில் நிலையத்திலிறங்கி பாண்டி செல்லும் பஸ்மூலம் மயிலம் வருவது மிக வசதியாயிருக்கும்.

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் திங்கள் தமிழ்த் தாள்

மலர் : முப்பத்தொன்று

1958

பத்திராசிரியர் :

புலவர் - முருகவேள், எம்.ஓ.எல்.

உதவிப் பத்திராசிரியர் :

ந. த. கிருஷ்ணசாமி, பி.ஏ., பி.டி.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

14, வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை - 4

உள்ளுறை

பொருள்	கட்டுரையாளர்	பக்க எண்
அப்பர் அருள்மொழி	மா. ப. தியாகராச முதலியார், பி.ஏ.	161
அருள் இயக்கம்	ஔவை. சு. துரைசாமி பிள்ளை	274
அவர் வளர்த்த குழந்தை	பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம்.ஏ.	159
அஷ்டப்பிரகரணம்	தி. கி. நாராயணசாமி நாயுடு	102
ஆண்டு விழாத் திறப்புரை	அமைச்சர் - பக்தவத்சலம், பி.ஏ., பி.எல்.	35
ஆரூரர் தோழமை	நல். முருகேச முதலியார், பி.ஏ.	225
ஆலய அமைப்பு	சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார், பி.ஏ., பி.எல்.	177, 197
ஆளுடைய பிள்ளையார் ஞானப்பாலுண்டது	சிவனடியார்	304
ஆறும் திருமுறை	பொன். கோவிந்தசாமி (மலேயா)	379, 436
இரங்கல் உரைகள்		130, 182, 205
இரங்கற் கோவை		149
இருபெருஞ் சான்றோர்	புலவர் முருகவேள், எம்.ஓ.எல்.	257
இனி நாம் செய்வதென்?	நல். முருகேச முதலியார், பி. ஏ.	121
இனியவர் யார்	வல்லை. பாலசுப்பிரமணியம், பி.ஏ.	334
இனி யார் உளர்?	,,	126
இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை	ச. சிவகுமரனார் எம். ஏ.	19
இளைஞர் மாநாட்டுத் திறப்புரை	மணலி. இராமகிருஷ்ண முதலியார், பி. ஏ.	15
எது வாழ்க்கை?	செ. வேங்கடராமச் செட்டியார்	96
எவன் தலைவன்	அ. தா. ப. திருஞானசம்பந்தன்	62
"கணபதியை நினைந்து வாழ்வாம்"	ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர்	289
கந்தர் அனுபூதி	மா. ப. தியாகராச முதலியார், பி. ஏ.	69, 93, 221, 237, 273, 339
கந்தபுராண நுட்பம்	ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல். டி.	398

பொருள்	கட்டுரையாளர்	பக்க எண்

கலித்தொகையிற் சைவம்—மயிலம் - சி. துரைசாமி ஐயர் ... 173
காமாட்சி திருமணம் – ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் 163
குருவாக்கியம்—நல்லூர் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்... 193
சமய பரிபாலனம்—மா. தங்கவேல் பிள்ளை ... 314
சமாஜ ஆண்டறிக்கை—மா. ப. தியாகராச முதலியார், பி. ஏ. 40
சமாஜத் தீர்மானங்கள்—புலவர் முருகவேள், எம். ஓ.எல். 49
சமாஜ மகாநாடு—நே. த. கிருஷ்ணசாமி முதலியார், பி. ஏ., பி.டி. ... 44
சமாஜ வரவேற்புரைகள்—புலவர் முருகவேள், எம். ஓ. எல். 52, 84
சமாஜ வேண்டுகோள்— ,, ... 81
சன்மார்க்க சித்தியார்—முத்து. சு. மாணிக்கவாசக முதலியார். 88, 187
சுந்தரமூர்த்தி சுவாமிகள்—மா. ப. தியாகராச முதலியார், பி. ஏ. ... 234
சேக்கிழார் சுவாமிகளும் பெரிய புராணமும் —"கொங்குமலர்" ... 362
சைவசித்தாந்தம் வளர்ந்தவழி—தி. கி. நாராயணசாமி நாயுடு 269, 295
சைவத்தேர்வு விைக்கள்—1958 ... 433
'ஞானக்கண்' இழந்தோம்—வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார் ... 128
தலைமைப் பேருரை—ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள்... 216
,, ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல். ... 1
தனிப்பட்ட மகனார்—சி.எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல். ... 121
தாயுமானார்—நச்சி. முனிசாமி உடையார், பி. ஏ. 168, 209
திருநாவுக்கரசர் வரலாற்றுண்மை—பூ. சமரபுரி முதலியார் ... 263
திருப்போரூர்ச் சிறப்பு நிகழ்ச்சிகள்—புலவர் முருகவேள், எம். ஓ. எல். ... 344
தொல்காப்பியர் ,, ... 321

பொருள்	கட்டுரையாளர்	பக்க எண்

நடராசர்—"கொங்குமலர்" ... 347
நீரிற் குமிழி—சு. இரத்தின தேசிகர் ... 86
பதி பசு பாச விளக்கம்—நல். முருகேச முதலியார், பி.ஏ. ... 355
பன்னிரு திருமுறை — பொன் கோவிந்தசாமி (மலேயா) ... 305
பெண்மணித் தொண்டர்கள்—கற்பகவல்லி சோமசுந்தரம் ... 56
பொய்க்கால் குதிரை—சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி. ஏ., பி.எல். 249, 285
மகோத்ஸவம்—நே. த. கிருஷ்ணசாமி முதலியார், பி.ஏ., பி.டி. ... 73
மங்கையர் மாநாட்டுத் திறப்புரை—திருமதி. சரோஜினி வரதப்பன் ... 29
மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன்—பாலூர். கண்ணப்ப முதலியார், பீ.ஓ.எல். ... 315
மதிப்புரைகள்—புலவர் முருகவேள், எம். ஓ. எல். 68, 110, 191, 255, 341
மயிலம்—செயலாளர் ... 311
மயிலைகிழார் இளமுருகனார்—தி. கி. நாராயணசாமி நாயுடு ... 116
மயிலைகிழார் மறைவு—புலவர் முருகவேள், எம்.ஓ.எல் ... 113
மற்று ஈண்டு வாரா நெறி—ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் ... 239
மீனாட்சி திருமணம்—ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. ... 413
முருகன் பெருமை— " ... 385
மெய்கண்டதேவர்—வே. நாகலிங்கம் பிள்ளை, J. P. U. M. ... 104
மெய்ஞ்ஞானம்—பூ. சமரபுரி முதலியார் ... 230
விண்ணப்பம்—நல். முருகேச முதலியார், பி. ஏ. ... 353
" —மா. ப. தியாகராச முதலியார், பி.ஏ. ... 207
விநாயகப் பெருமான்—ஜி. கல்யாணம் பிள்ளை, எம். ஏ. 301

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14